ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ இரக்கமின்றி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ இரக்கமின்றி ॥

## பொங்கத்தம் பொங்கோ

‡இரக்கம் இன்றி எங்கோன் செய்த தீமை⋆
இம்மையே எமக்கெய்திற்றுக் காணீர்⋆
பரக்க யாம் இன்றுரைத்தென் இராவணன்
பட்டனன்⋆ இனி யாவர்க்குரைக்கோம்⋆
குரக்கு நாயகர் காள்! இளங்கோவே⋆
கோல வல்வில் இராமபிரானே⋆
அரக்கர் ஆடழைப்பார் இல்லை⋆ நாங்கள்
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (1)

பத்து நீள் முடியும் அவற்றிரட்டிப்⋆
பாழித் தோளும் படைத்தவன் செல்வம்⋆
சித்தம் மங்கையர் பால்வைத்துக் கெட்டான்⋆
செய்வதொன்றறியா அடியோங்கள்⋆
ஒத்த தோள் இரண்டும் ஒரு முடியும்⋆
ஒருவர் தம் திறத்தோம் அன்றி வாழ்ந்தோம்⋆
அத்த! எம் பெருமான்! எம்மைக் கொல்லேல்⋆
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (2)

தண்டகாரணியம் புகுந்து⋆ அன்று
தையலைத் தகவிலி எம் கோமான்⋆
கொண்டு போந்து கெட்டான் எமக்கிங்கோர்
குற்றம் இல்லை⋆ கொல்லேல் குல வேந்தே⋆
பெண்டிரால் கெடும் இக்குடி தன்னைப்⋆
பேசுகின்றதென் தாசரதீ⋆ உன்
அண்ட வாணர் உகப்பதே செய்தாய்⋆
அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (3)

www.prapatti.com

எஞ்சலில் இலங்கைக்கிறை⋆ எங்கோன்
    தன்னை முன் பணிந்து⋆ எங்கள் கண்முகப்பே
நஞ்சு தான் அரக்கர் குடிக்கென்று⋆
    நங்கையை அவன் தம்பியே சொன்னான்⋆
விஞ்சை வானவர் வேண்டிற்றே பட்டோம்⋆
    வேரி வார் பொழில் மா மயில் அன்ன⋆
அஞ்சலோதியைக் கொண்டு நடமின்⋆
    அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (4)

செம் பொன் நீள் முடி எங்கள் இராவணன்⋆
    சீதை என்பதோர் தெய்வம் கொணர்ந்து⋆
வம்புலாம் கடி காவில் சிறையா
    வைத்ததே⋆ குற்றம் ஆயிற்றுக் காணீர்⋆
கும்பனோடு நிகும்பனும் பட்டான்⋆
    கூற்றம் மானிடமாய் வந்து தோன்றி⋆
அம்பினால் எம்மைக் கொன்றிடுகின்றது⋆
    அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (5)

ஓத மா கடலைக் கடந்தேறி⋆
    உயர்கொள் மாக் கடி காவை இறுத்து⋆
காதல் மக்களும் சுற்றமும் கொன்று⋆
    கடி இலங்கை மலங்க எரித்துத்⋆
தூது வந்த குரங்குக்கே⋆ உங்கள்
    தோன்றல் தேவியை விட்டு கொடாதே⋆
ஆதர் நின்று படுகின்றதந்தோ!⋆
    அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (6)

தாழம் இன்றி முந்நீரை அஞ்ஞான்று⋆
    தகைந்ததே கண்டு வஞ்சி நுண் மருங்குல்⋆
மாழை மான் மட நோக்கியை விட்டு⋆
    வாழகிலா மதியில் மனத்தானை⋆
ஏழையை இலங்கைக்கிறை தன்னை⋆
    எங்களை ஒழியக் கொலையவனை⋆

www.prapatti.com

சூழுமா நினை மா மணி வண்ணா!⋆
    சொல்லினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (7)

மனம் கொண்டேறும் மண்டோதரி முதலா⋆
    அங்கயற் கண்ணினார்கள் இருப்ப⋆
தனங்கொள் மென் முலை நோக்கம் ஒழிந்து⋆
    தஞ்சமே சில தாபதர் என்று⋆
புனங்கொள் மென் மயிலைச் சிறை வைத்த⋆
    புன்மையாளன் நெஞ்சில் புக எய்த⋆
அனங்கன் அன்ன திண்தோள் எம்மிராமற்கு⋆
    அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (8)

புரங்கள் மூன்றுமோர் மாத்திரைப் போதில்⋆
    பொங்கெரிக்கிரை கண்டவன் அம்பின்⋆
சரங்களே கொடிதாய் அடுகின்ற⋆
    சாம்பவான் உடன் நிற்கத் தொழுதோம்⋆
இரங்கு நீ எமக்கெந்தை பிரானே!⋆
    இலங்கு வெங்கதிரோன் சிறுவா⋆
குரங்குகட்கரசே! எம்மைக் கொல்லேல்!⋆
    கூறினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (9)

‡அங்கவ் வானவர்க்காகுலம் தீர⋆
    அணி இலங்கை அழித்தவன் தன்னை⋆
பொங்கு மா வலவன் கலிகன்றி⋆
    புகன்ற பொங்கத்தம் கொண்டு⋆ இவ்வுலகில்
எங்கும் பாடி நின்றாடுமின் தொண்டீர்!⋆
    இம்மையே இடர் இல்லை⋆ இறந்தால்
தங்குமூர் அண்டமே கண்டு கொண்மின்⋆
    சாற்றினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥



www.prapatti.com